

# நம்பிக்கையின் தளம்

## ஸ்ரீ மாதா அறக்கட்டளை



அது ஒரு பரபரப்பான புதன்கிழமை;
காலை நேரம். இடம்- மத்திய கைலாஷ்.
பேருந்துகளும், மகிழுந்துகளும், துள்ளுந்துகளும்,
மிதியுந்துகளும், ஒலியெழுப்பியபடி இருக்க,
பாதசாரிகள் அங்குமிங்கும் நோக்கியபடி
சாலையைக் கடக்க, ஒழுங்கைக் கொண்டுவர
அங்கிருந்த போலீஸ்காரர் தன்னால் இயன்றவரை
முயற்சி செய்ய, ஏற்கெனவே தகித்துக்
கொண்டிருந்த கோடை வெப்பம், இந்த
அல்லோலகல்லோலத்தினால் இன்னும் ஏறியது.

இவ்வளவு கூச்சல், குழப்பத்திற்கு நடுவில்,
பழைய அடையாறு புற்று நோய் நிலைய
வளாகத்தில் (Adyar Cancer Institute)
அமைந்துள்ள மூன்று மாடிக் கட்டிடத்தின்
உள்ளே நிறைய விஷயங்கள் நடைபெற்றுக்
கொண்டிருக்கின்றன. தரைத்தளத்தில் இருக்கும்
காத்திருக்கும் பகுதியில் (waiting area )
உள்ள நாற்காலிகள், இந்தியாவின் பல
பகுதிகளைச் சார்ந்த இளைஞர்களாலும்,
நடுத்தர வயதினர்களும், முதியவர்களாலும்,
நிரப்பப்படுகின்றன. சிலரது கைகளில்
கைப்பெட்டியும், பயணப்பெட்டியும்
காணப்படுகின்றன. பேசிக்கொண்டும்,
அவ்வப்பொழுது யாரிடமோ சப்தமிட்டபடியும்,
பல தொண்டர்கள் அங்குமிங்குமாக வேகமாக
சென்று கொண்டிருக்கிறார்கள். காத்திருக்கும்
பகுதியின் ஒரு மூலையில் இருக்கும்
அறைக்குள்ளே, காய்கறிகளும், அரிசி,
பருப்பு முதலியனவைகளும் காணப்படுகின்றன.
ஒரு யுவதி, கோணிப்பையினைத் திறந்து,
அதிலிருந்து உருளைக்கிழங்கு, வெங்காயம்,
தக்காளி இவைகளை எடுத்து, அவற்றுக்குரிய
பாத்திரங்களில் நிரப்புகிறாள்.
காத்திருக்கும் பகுதியின் இன்னொரு புறத்தில்
இரு பக்கங்களும் அறைகள் இருக்கும்
ஒரு தாழ்வாரம் காணப்படுகிறது.
அந்த அறைகளுக்குள்ளே இரும்புக்கட்டில்களும்,
அதன்மீது அமர்ந்து கொண்டு,
ஓய்வெடுத்துக்கொண்டோ, அரட்டை
அடித்துக்கொண்டோ, பலரும் இருப்பதைக்
காண முடிகின்றது. முதலாவது, இரண்டாவது
மாடிகளுக்குச் செல்ல படிக்கட்டுகளும்,
சாய்ப்பிடையும் ( ramp) தனித்தனியே
இருக்க, அங்கும் இதேபோன்று அறைகளும்,
கட்டில்களும், மக்களும் இருக்கிறார்கள்.

தரைத்தளத்தில் இருக்கும் தாழ்வாரத்தின் முடிவில்
இருக்கிறது சமையல் அறை. வெட்டப்பட்ட
காய்கறிகளும், சாம்பார், ரசம், வெந்த சாதம்
முதலியவைகள் நிரப்பப்பட்ட பித்தளை
பாத்திரங்களும், எவர்சில்வர் பாத்திரங்களும்,
தட்டுகளும், கீழே தரையில் இருக்க, 3 பேர்
கொண்ட ஒரு குழு, உருளைக்கிழங்கு,
வெங்காயம், வெண்டைக்காய், கோஸ்-இவைகளை
நறுக்கிக்கொண்டிருக்கிறார்கள். உள்ளே இருக்கும்
ஒரு சிறிய அறையில்,
பல அடுப்புகளில் சாப்பாடு தயாராகிக்
கொண்டிருக்கிறது. இது இன்னும் சிறிது நேரத்தில்
மதிய உணவாக அந்தக் கட்டிடத்தில் இருக்கும்
ஒவ்வொரு நபருக்கும் இலவசமதிய
உணவாகச் செல்லும். காலைச் சிற்றுண்டியாக
1500 இட்லிகளும், 22 கிலோ கிச்சடியும்
தயாரிக்கப்பட்டு காலை 7 மணிக்கு
அனைவருக்கும் அளிக்கப்பட்டு விட்டது.
இதற்கான சமையல் காலை 3 மணிக்கே
தொடங்கப்பட்டது. இரவு உணவுக்கான
செய்முறை, மதிய உணவு அளித்த சில
மணி நேரத்தில் தொடங்கும்.

புற்று நோய் நோயாளிகளின் இன்னொரு
வீடாக இயங்கும் ‘ஸ்ரீ மாதா அறக்கட்டளையின்
(Sri Matha Trust) ஒரு நாளின் மாதிரி
எடுத்துக்காட்டு இது.

2000ம் ஆண்டிலிருந்து, பல்லாயிரம் மைல்கள்
கடந்து வந்து அடையார் புற்றுநோய்
மருத்துவமனையில் சிகிச்சைக்காக வரும்
நோயாளிகளுக்கு தங்கும் வசதியும்,
தரம் நிறைந்த உணவும் வழங்கி வருகிறது
ஸ்ரீ மாதா அறக்கட்டளை. இதனை முன் நின்று
நடத்துபவர்கள், இதன் நிர்வாகப்
பொருளாளரான திரு. வி. கிருஷ்ணமூர்த்தி
மற்றும் டாக்டர். விஜயஸ்ரீ.

**தொடக்கம்**

1999ஆம் ஆண்டின் பிற்பகுதியில், காஞ்சி
மடத்தின் பீடாதிபதி ஸ்ரீஜெயேந்திர சரஸ்வதி
ஸ்வாமிகளைக் காண பிரபலமான ஒருவர்,
ஒரு வித்தியாசமான கோரிக்கையோடு வந்தார்.
அவர், சென்னை அடையாறு புற்று நோய்
மருத்துவமனையின் முன்னோடியாக விளங்கும்
டாக்டர். வி.சாந்தா. அவரது கோரிக்கை- ‘புற்று
நோய் சிகிச்சைக்காக வரும் நோயாளிகளுக்காகக்
கட்டப்பட்ட தங்கு விடுதியை ஏற்று நடத்த
வேண்டும்’. வெளியூரிலிருந்து வரும்
நோயாளிகள் தங்குவதற்காக திரு. நாஹர் போன்ற
கொடையாளிகளின் நன்கொடையால் கட்டப்பட்ட
அந்த விடுதியை நடத்துவது அடையாறு புற்று
நோய் நிலையத்திற்கு சற்று சிரமமாக இருந்தது.

சிறிது நேரம் யோசித்தபிறகு, கண்டிப்பாக
ஒரு தீர்வு காணுவதாக டாக்டர். சாந்தாவிடம்
கூறிய திரு. ஜெயேந்திரர், 55 வயது நிரம்பிய



திரு.வி.கிருஷ்ணமூர்த்தி என்பவரை அழைத்தார். 1965 ஆம் ஆண்டு முதல் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷனில் பணி புரிந்து வந்த திரு.கிருஷ்ணமூர்த்தி, தொண்டு மனப்பான்மை நிரம்பியவர். ‘‘நீங்கள் நிறைய காலம் உங்களுக்காக வேலை செய்து விட்டீர்கள். இப்பொழுது பிறருக்காக செய்யுங்கள். அடையாறு புற்றுநோய் நிலையத்தில் இருக்கும் தங்கு விடுதியை நீங்கள் பொறுப்பெடுத்து நடத்துங்கள்’’, என்று அவரிடம் கட்டளையிட்டார். நேர்மைக்கும், கண்ணியத்திற்கும், நிர்வகிக்கும் திறனுக்கும் பெயர் போன திரு.கிருஷ்ணமூர்த்தி இதனை எதிர்பார்க்கவில்லை. தம்மால் இது இயலுமா என்று அவருக்குத் தோன்றியது. எனினும், தமது குருவின் கட்டளை இது என்பதால், 35 வருடங்கள் செய்து வந்த வேலையை விட்டு, இந்தப் பணியில் இறங்கினார். சமுதாயத்திற்கு நன்றிக்கடன் செலுத்தும் தருணம் இது அவருக்கு.

**வி.கிருஷ்ணமூர்த்தி**

தமிழ்நாட்டில் கந்தனூர் என்னும் ஊரில் 1944ஆம் ஆண்டு பிறந்தார் கிருஷ்ணமூர்த்தி. 10 வயது இருக்கும்பொழுது அவரது தாயார் வயிற்றுப்போக்கால் இறந்து போனார். குடும்ப சூழ்நிலை காரணமாகப் பள்ளிப்படிப்பை முடித்தவுடன், சென்னையில் இருந்த தனது மாமாவின் பெட்ரோல் பங்கில் வேலைக்குச் சேர்ந்தார். அவரது புத்திசாலித்தனம், சாமர்த்தியம் சிலரைக் கவர்ந்தன. அவ்வாறு கவரப்பட்ட ஒருவர் அப்போதைய தமிழகத்தின் உள்துறை அமைச்சராக இருந்த திரு.கக்கன். சென்னை அரசினர் கல்லூரியில் பி.எஸ்சி. பட்டப்படிப்பில் அவர் சேர உதவி புரிந்தார். அதுமட்டுமல்லாமல், அவருக்கு உதவித்தொகை வழங்கவும் ஏற்பாடு செய்தார்.

படிப்பு முடிந்ததும், இந்தியன் ஆயில் கார்ப்பரேஷனில் சேர்ந்த திரு.கிருஷ்ணமூர்த்தி, தொழிற்சங்க நடவடிக்கைகளில் நிறைய ஈடுபட்டார். அவருடைய ஆன்மீக ஈடுபாடு, காஞ்சி மடத்தில் தொண்டனாக அவரை ஆக்கியது. அங்கு நடைபெறும் நிகழ்ச்சிகளை திறம்பட ஒழுங்குமுறையுடன் அவர் நடத்துவது, திரு.ஜெயேந்திர சரஸ்வதியின் பார்வைக்கு வந்தது. இதுவே, பல வருடங்கள் கழித்து, மடத்துக்காக ஒரு மாபெரும் தொண்டு செய்வதற்குக் காரணமாக இருக்கும் என்று அவர் சிறிதும் நினைத்துப் பார்க்கவில்லை. ஆசாரியரின் கட்டளையினால், லட்சக்கணக்கானவர்களுக்கு உதவி செய்யும் வாய்ப்பு கிட்டுவதை அவர் நன்றியுடன் நினைத்துப் பார்த்தார். சிறு வயதில், வயிற்றுப்போக்கினால் தாயார் இறந்தது, அவர் இதயத்தில் ஒரு மாறா வடுவை ஏற்படுத்தியிருந்தது.

**ஸ்ரீமாதா அறக்கட்டளை**

சவாலை ஏற்றுக்கொண்ட 55 வயதான கிருஷ்ணமூர்த்தி, குடும்பத்தின் முழு ஆதரவோடு, வேலையில் உடனே இறங்கினார். பலதரப்பட்ட மக்களை அறநிலைக்காவலர்களாகக் கொண்டு (அதில் ஒருவர் புற்று நோயிலிருந்து மீண்டு வந்தவர்) அறக்கட்டளை ஒன்றை நிறுவினார்.

**அவருடைய குறிக்கோள்கள்:**

1.அனைத்து மதத்தவருக்கும் அனுமதி
2.தூய்மையான, பாதுகாப்பான இடம்
3.சுத்தமான கழிவறை
4.சத்தான உணவு

படிப்படியாக ஆராய்ந்து, செம்மைப்படுத்தி, பலவித போராட்டங்களுக்குப் பின்னர், இவையெல்லாவற்றையும் அவர் நிறைவேற்ற முடிந்தது. இதற்கு நடுவில் புற்று நோய், தொற்று நோய் அல்ல என்று நோயாளிகளையும், அவர்களுடைய உறவினர்களையும் நம்ப வைக்க வேண்டியிருந்தது.

இந்தியாவின் பலமூலைகளிலிருந்தும் நோயாளிகள் வந்த வண்ணம் இருந்து, சில நாட்கள் முதல் பல மாதங்கள் வரை தங்கினார்கள். பல சமயங்களில், நோயாளிகளுடன் வருபவர்கள், சில நாட்களுக்குள் தத்தமது ஊர்களுக்குத் திரும்ப வேண்டியதாக இருந்ததால், நோயாளிகள் தனியாக இருந்தார்கள். எனினும், அவர்கள் பாதுகாப்புக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாத வகையில் திரு.கிருஷ்ணமூர்த்தி கவனித்துக் கொண்டார்.

முகத்தில் பெருமிதத்துடன், மேற்கு வங்கத்திலிருந்து தனியாக வந்த ஒரு முஸ்லிம் இளம்பெண்ணின் கதையை அவர் கூறுகிறார். இங்கு தங்கியிருப்பதை அறிந்த அவரது மதத்தினர், தாம் நடத்தும் விடுதியில் வந்து இருக்க அந்தப் பெண்ணை வற்புறுத்தியும், ‘அப்பா’வின் (கிருஷ்ணமூர்த்தி) அன்பான பராமரிப்பில் மிகவும் பாதுகாப்பாக உணர்வதால், ‘ஸ்ரீமாதாவிலேயே’ தங்கி விட்டார்.

விடுதி நடத்துவதற்கான நிதியுதவி பலரிடமிருந்தும் தாராளமாக வருகிறது. இதற்குக் காரணம் திரு. கிருஷ்ணமூர்த்தியின் புத்திசாலித்தனமான செயல்பாடுதான். ‘ஸ்ரீ மாதாவின்’ சாதனைகளை அவர் உதாரணங்களுடன் எடுத்துக் கூறுவதால், பலருக்கும் இதற்கு உதவத் தோன்றுகிறது. ‘நாம் நல்ல காரியம் செய்தால், கண்டிப்பாக மக்கள் வந்து உதவுவார்கள்’ என்று நம்புகிறார் இவர்.

இவருடைய கடும் முயற்சியினால், ஒரே சமயத்தில் 100 நோயாளிகள் இலவசமாகத் தங்கவும், 300 பேர்கள் இலவசமாக சாப்பிடவும் இங்கே இப்பொழுது முடியும்.

சவால்களை விரும்பும் திரு. கிருஷ்ணமூர்த்தி, தனது அடுத்த சவாலுக்கும் தயாரானார். எனினும், செயல்படுத்த ஒரு குழு வேண்டும் என்று உணர்ந்தார்.

**நம்பிக்கைக்குரிய உதவியாளர்**

2009ஆம் ஆண்டு , ‘மயிலை எக்ஸ்ப்ரெஸ்’ செய்தி பத்திரிகையின் ஆசிரியர், டாக்டர். விஜயஸ்ரீ, ‘ஸ்ரீ மாதா’வைப் பற்றி எழுத விழைந்தார். ‘வி.கே. ஸாரை’ சந்தித்தது ஒரு மறக்கமுடியாத அனுபவமாயிற்று அவருக்கு. ‘மனிதரா, புனிதரா’ என்ற பெயரில் அவர் எழுதிய கட்டுரை, புற்றுநோயாளிகளின் மீது அவருக்கிருந்த பரிவையும், அக்கறையையும் புலப்படுத்தியது. விஜயஸ்ரீயின் புத்திசாலித்தனத்திலும், இரக்க குணத்திலும் கவரப்பட்ட திரு. கிருஷ்ணமூர்த்தி, அவரை விடுதியில் உதவி செய்ய ஊக்கமளித்தார். சிறு வயதில், லேடி சிவசுவாமி பள்ளியில் படித்தபொழுது சமூக சேவைக்காக தமிழக அரசிடம் சான்றிதழ் பெற்றவர் விஜய ஸ்ரீ. எனினும், எதிர்காலத்தில் ‘ஸ்ரீ மாதா’ வில் அவர் செய்யவிருந்த சேவைகளுக்கான அறிகுறி, அவரது கடந்தகாலத்தில் கண்டிப்பாகத் தெரியவில்லை. வார இறுதிகளில் தொண்டில் ஈடுபட்டவர், போகப்போக, அரசாங்கத்துடன் தொடர்பு கொள்ளுவது, நிதியுதவி செய்பவர்களுடன் பேசுவது என தன்னை ஈடுபடுத்திக் கொள்ளத் தொடங்கினார். பிறகு, தனது செய்தி பத்திரிகையை ஒரு நண்பரிடம் ஒப்படைத்து விட்டு, முழுவதுமாக ‘ஸ்ரீ மாதா’ வில் இறங்கி விட்டார்.

தனது ‘சிஷ்யை’யின் நடவடிக்கைகளில் பெருமை அடைந்த திரு.கிருஷ்ணமூர்த்தி, விஜய ஸ்ரீயின் வீட்டிற்குச் சென்று அவரது தந்தையிடம் அவரது மகளை தத்து எடுத்துக்கொள்ள அனுமதி கேட்க, முதலில் திகைத்த தந்தை, அவர்கள் செய்யும் நற்பணிகளைக் கருத்தில் கொண்டு அதற்கு சம்மதித்தார். இன்று டாக்டர். விஜய ஸ்ரீயின் கணவர், இரண்டு குழந்தைகள், சகோதரி என அனைவரும் ஏதோ ஒரு வகையில் அங்கு தொண்டாற்றி வருகின்றனர்.

குழுவின் பலம் பெருகியதால், அடுத்த சவாலை ஏற்கத் தயாரானது ‘ஸ்ரீ மாதா அறக்கட்டளை’.

**எஸ்.எம்.சி.சி. அந்திம பராமரிப்பகம் (SMCC Hospice)**

30 சதவிகித புற்றுநோயாளிகள் கடைசி நிலையை அடைந்து விடுகிறார்கள். நோயாளிகளின் கடும் வலி ஒரு புறமிருக்க, அவர்களுக்கு வேண்டிய பராமரிப்பு அளிப்பது ஒரு மிகப் பெரிய விஷயம். இந்த நிலையை சரிவர சமாளிப்பது எப்படி என்று டாக்டர். விஜய ஸ்ரீ பலவாறு ஆய்வு செய்து, யோசித்து, இறுதியாக, அந்திம பராமரிப்பகம் ( hospice) ஒன்றே சிறந்த வழி என அறிந்து கொண்டார். இதனை நடைமுறைப்படுத்த ‘ஸ்ரீ மாதா புற்றுநோய் காப்பகம்’ (Sri Matha Cancer Care ) என்ற ஒரு அறக்கட்டளை தொடங்கப்பட்டது. இங்கு, புற்றுநோயாளிகள் மட்டுமல்லாமல், இறுதி நிலையில் இருக்கும் அனைத்து நோயாளிகளும் சேர்க்கப்படலாம் என்ற தீர்மானமான முடிவு செய்யப்பட்டது. ‘எஸ்.எம்.சி.சி.’ யின் முக்கிய இலக்கு ‘வலி-குறைந்த, பசியற்ற மரணம்’. இதற்காக, இந்திரா நகரில் ஒரு தனி வீடு குத்தகைக்கு எடுக்கப்பட்டது; சென்னையிலுள்ள அனைத்து மருத்துவமனைகளுக்கும் இதனைப் பற்றிய செய்தி தெருவிக்கப்பட்டது.




இதனைப் பாராட்டிய சென்னை மருத்துவமனையின் முதல்வர், தமிழக அரசுக்கும், எஸ்.எம்.சி.சி.க்கும், ‘புரிந்துணர்வு ஒப்பந்தம் (Memorandum of Understanding) ஏற்பட வைத்து, அந்திம காலத்தில் இருக்கும் நோயாளிகளை, அரசு, எஸ்.எம்.சி.சி.க்கு அனுப்ப வகை செய்தார்.

நூற்றுக்கணக்கான நோயாளிகள், தமது ‘வலி’ குறைந்த நிலையில் தமது இறுதிகாலத்தை இங்கு கழிக்கிறார்கள். நோயின் தாக்குதலின் வீரியத்தால் உடலளவில் மிகவும் சிதைந்து காணப்படும் நோயாளிகளின் மனம் சிதையுமாறு அவர்களது உறவினர்கள் அவர்களை ஒதுக்கி வைக்கிறார்கள். சிலரின் அந்திம கடனை செய்யக்கூட உறவினர்கள் யாரும் வருவதில்லை. இதுபோன்ற சந்தர்ப்பங்களில் டாக்டர். விஜயஸ்ரீயின் தந்தை தாமே அந்தக் கடன்களை செய்து, இறந்தவர்களுக்கு இறுதி மரியாதை செலுத்துகிறார்.

’அப்பா’, டாக்டர். விஜயஸ்ரீ மற்றும் அவர்களது குழு, பலவித தடைகளைக் கடக்கக் காரணம் அவர்களது மனிதாபிமானம், இறுதிவரை போராடும் குணம்தான். இதே மனப்பாங்குடன், இப்பொழுது அடுத்த சவாலை சந்திக்க இறங்கி விட்டார்கள்.

**சொந்தமான ‘அந்திம பராமரிப்பகம்’ (Hospice)**

முன்னேறிய வசதிகளுடன் நவீன அந்திம பராமரிப்பகம் வேண்டும் என்ற இவர்களது கனவு நிறைவேற்வதற்கான முதல் படி, துரைப்பாக்கத்தில் வாங்கியுள்ள, நான்கு நிலபரப்பு கொண்ட மனை. 50 படுக்கை வசதியும், 10 கூழ்மப்பிரிப்பு யந்திரங்களும் (dialysis machines) இங்கு இருக்கும். 5 கோடி ரூபாய் மதிப்புள்ள இந்த செயல்திட்டத்திற்கான நிதி முழுக்க முழுக்க நன்கொடைகளை நம்பியிருக்கிறது. ஒரு நபர் 2500 ரூபாய் அளித்தால், ஒரு சதுர அடி கட்டலாம்.எனவே, 2500 நல்ல மனங்கள் சேர்ந்தால், இவர்களது கனவு முழுவதுமாக நிறைவேறும்.

நம்பிக்கையுடன் திரு.கிருஷ்ணமூர்த்தி மீண்டும் கூறுவது, ‘‘நாம் நல்ல காரியம் செய்தால், கண்டிப்பாக மக்கள் வந்து உதவுவார்கள்’’ என்பதுதான்.

**சமுதாயத்தின் கடமை**

எல்லோரும் இவ்வளவு அசாதரணமான சேவை மனப்பான்மையுடன் இருப்பதை எதிர்பார்க்க முடியாது என்றாலும், இது போன்ற மனிதர்களுக்கு ஆதரவு தருவது நம் ஒவ்வொருவரின் கடமையாகும்.

புற்றுநோயாளிகளுக்குப் புகலிடம் அளித்து, இடவசதி, உணவு மற்றும் பாதுகாப்பும் அளித்து, புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களின் முதல் பயண இலக்கு சென்னை என்று ஆக்கி, தன்னலம் இல்லா சேவை செய்துவரும் திரு.வி.கிருஷ்ணமூர்த்தி மற்றும் டாக்டர். விஜயஸ்ரீயால் திறம்பட நிர்வகிக்கப்பட்டு வரும் ‘ஸ்ரீ மாதா அறக்கட்டளை’ சென்னையின் முதன்மை சான்ற ’வெற்றி வீரர்’.